1980 பிப்ரவரி 7]

3. தகவல் கோரல்

(அ) திரு. க. இராசாராம் வீட்டில் தொங்கும் பெயர் பலகை குறித்து

திரு. துரை முத்துசாமி : தற்போது புதிதாகச் சட்ட மன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. ராசாராம் அவர்கள் முன்பு தமிழகத்தின் தனிப் பிரதிநிதியாக டில்லியில் இருந்தார்கள். அவர்கள் இன்னும் அந்தப் பதவியில் இருக்கிறார்களா? அவர்கள் வீட்டு போர்டில் அப்படி எழுதப்பட்டிருப்பது இன்னும் தொங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்பமிகு பேரவைத் தலைவர் : அவர் அந்தப் பதவியிலிருந்து விலகி விட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். போர்டு இருப்பதை பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : பத்திரிகையில் வரும் செய்தியை நம்பி இங்கே பேசக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் இப்போது பத்திரிகைச் செய்தியைக் கூறுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி இப்போது இந்த மன்றத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்ற முறையில் தான் கூறினேன்.

திரு. க. இராசாராம்: அந்த போர்டு என் பெயர் உள்ள போர்டு. பெயரை மாற்றுகிற சூழ்நிலை வரவில்லை. அந்த போர்டில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி என்று இல்லை. அவர்கள் சமீபத்தில் என் வீட்டுக்கு வரவில்லை என்று நினைக்கிறேன். வந்தால் பார்க்கலாம்.

(ஆ) மக்கள் குரல் நாளேட்டில் பேரவையில் நடைபெறாத செய்தி வந்துள்ளது குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நேற்று நடந்த சம்பவத்தையொட்டி பத்திரிகையிலே வந்திருக்கும் செய்தியைத் தலைவரவர்கள் படித்திருக்கலாம் என்று கருதுகிறேன். கூத்தகுடி சண்முகம் பேச எழுந்த பொழுது ** என்று திராவிட முன்னேற்றக் கழக கட்சியிலிருந்து சிலர் சப்தம் போட்டதாக பத்திரிகையிலே வந்திருக்கிறது. இது என் மனதைப் புண்படுத்தியிருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நேற்று பேராசிரியர் அவர்கள் பேசுகிற பொழுது நான் குறுக்கிடவில்லை. அவர்கள் பண்போடு பேசுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பேசி முடிந்த பிறகு, முதலில்

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1980 பிப்ரவரி 7

என்னைக் கூப்பிட்டீர்களே என்று கேட்டேனே தவிர. அவர்கள் பேச்சில் நான் குறுக்கிடவில்லை. நான் எழுந்த பிறகு * என்று கூத்தகுடி சண்முகத்தை சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறார்கள் என்று தமிழ்நாடு பூராவும் தகவல் வருமானால் அது எந்த அளவிற்கு என் மனத்தைப் புண்படுத்தியிருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதே நிலைமையில் வேறு எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு வந்து, * * என்று பத்திரிகையிலே வந்திருக்குமானால் எவ்வளவு ஆழமான மனவருத்தம் அடைந்திருப்பார்கள், எப்படிக் கிளப்பியிருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, * * என்று அவர்கள் சொல்லவில்லை என்றாலும் எனக்கு ஆட்சேபணையில்லை. சொன்னதாகப் போட்டிருப்பவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆகவேதான் சட்டமன்றக் கூட்டத்திற்கு நான் கேள்வி நேரத்திற்குக் கூட வரவில்லை. மனம் சங்கடப் பட்டேன். நான் மேடையிலே கூட 'நீ' என்று பேசாதவன், அதைப் போல 'நீ' என்று என்னைப் பற்றிப் பேசினாலும் அதைத் தாங்கிக் கொள்ள முடியாதவன். அப்படியிருக்கும் பொழுது, இந்தச் சபையின் மரபைச் சாக்க அவர்கள் என்ன கருத்து சொல்கிறார்கள் என்று உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் 'மக்கள் குரல்' பத்திரிகையை என்னிடத்தில் கொடுத்து, * * என்று போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை பேரவையில் எழுப்புங்கள், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டு பிறகு தீர்ப்புச் சொல்கிறேன் என்று தெரிவித்தேன்.

__திரு. து. புருஷோத்தமன் :__ தலைவரவர்களே, மக்கள் குரல்' பத்திரிகையில் வந்ததைப் பற்றி இங்கே வந்து சொல்வதானால் மற்றப் பத்திரிகைகளில் வந்திருப்பதைப் பற்றியும் சொல்ல வேண்டிவரும். முரசொலி' பத்திரிகையில் அப்படிப் பட்ட செய்தி வரவில்லை. தவறாக 'மக்கள் குரல்' பத்திரிகையில் வந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர .. ..

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ * * பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கொண்டு வருவது வேறு பிரச்னை. பத்திரிகையிலே வந்திருப்பதைப் போல சொன்னார்களா?

__திரு. து. புருஷோத்தமன் :__ நீங்கள் இந்த அவையிலே இருந்திருக்கிறீர்கள், உங்களுக்கும் தெரியும் அப்படிப் பேசவில்லை என்பது .. ..

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1980 பிப்ரவரி 7] [திரு கூத்தகுடி ச. சண்முகம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * அந்த நேரத்தில் பலரும் எழுந்து பேசியதனால் என்னால் சரியாக எதனையும் கவனிக்க முடியாமல் போயிற்று; அந்த வார்த்தைகளைச் சொன்னது உண்டா?

திரு. து. புருஷோத்தமன் : அருகில் இருக்கின்ற உங்களுக்கே காது கேட்கவில்லையென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொன்னீர்களா, இல்லையா?

திரு. து. புருஷோத்தமன் : சொல்லவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, மக்கள் குரல் பத்திரிகையில் வந்ததோடு, 'தினமணி' பத்திரிகையிலும் மறைமுகமாக, நாசுக்காகப் போடுகிறார்கள். நான் வேண்டுமென்று யாரையும் குற்றம் சொல்லவில்லை. ஆனால் இது மற்றவர்களுக்கு ஏற்பட்டிருந்தால் எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். யாரும் சொல்லவில்லை என்பதால் நான் இதில் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் அப்படிச் சொல்லவில்லை என்பதால பிரச்னைக்கே இடமில்லை.

4. கவன ஈர்ப்பு

சேலம் ஆர். சி. பிளாண்ட் கழிவு நீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. தீ. எம். அண்ணாமலை, டாக்டர் கே. சமரசம் ஆகியோர் கொடுத்துள்ளார்கள்.

[முற்பகல் 10-10]

திரு. எம், அண்ணாமலை: தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் மேட்டூர் கெமிக்கல்ஸ் ஆர். சி. பிளாண்ட் கழிவு நீரால், குடிநீர் கிணறுகளும் பாதிக்கப்பட்டதால் அப்பகுதி மக்களிடயே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த பொது நிகழ்வினைப் பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.